ஆகஸ்டு 1 — அறப்போர் துவக்கம்

இந்தி எழுத்துக்கள் அழிக்கப்படும்

கோவில்பட்டி முடிவு அமுலாகும்

மாவட்டங்களில் முன்னேற்பாடுகள்

பொதுச்செயலாளரும் களம் புகுவார்

முன்னணி வீரர்கள் முக்கிய இடங்களில்

ஆகஸ்டு 1-ந்தேதியன்று இந்தி ஏகாதிபத்யத்தை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறப்போர் நாடெங்கும் நடைபெறும்.

கோவில்பட்டியில் நிறைவேற்றப்பட்ட ரயில்வே 'இந்தி எழுத்து போர்டு அழிப்பு' தீர்மானப்படி, ரயில்வே நிலையங்களிலுள்ள இந்தி போர்டுகள் அழிக்கப்படும். தபால் அலுவலகங்களில் உள்ள இந்திப் பெயர்களை அழிக்கவும் தி. மு. க. அனுமதி தந்துவிட்டது.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை, ஈரோடு சந்திப்பில் அறப்போரிலீடுபடுவார்,

முன்னணி வீரர்கள் பலரும் நாடெங்கும் மேற்படிப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

26—7—52 சென்னை 'அறிவகம்' மாளிகையில் நடைபெற்றபொதுக் குழு உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டபின், பொதுச்செயலாளர் இந்த முடிவுகளை வெளியிட்டார். மாவட்டச் செயலாளர்களும், செயல் வீரர்களும் பொதுச் செயலாளர் ஆலோசனையோடு, தமது வட்டாரத்துக்குத் திரும்பினார்கள். ஆகஸ்ட்டுப் போர் சம்பந்தமான தாக்கீது, ஒவ்வொரு கிளைக் கழகத்துக்கும் தலைமை நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டுவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவசர ஆலோசனைக் கூட்டம் 26—7—52 காலை 11 மணிக்கு, சென்னை, தி. மு. கழக தலைமை நிலயத்தில் கூடிற்று. கூட்ட அறிவிப்பே, காலமின்மையால், தந்தி மூலமே பலருக்குத் தெரிவிக்க வேண்டியிருந்தும், தோழர்கள், திராவிடத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் வந்து சேர்ந்திருந்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டோர் விவரம்: பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை, கே. கே. நீலமேகம், ஈ. வி. கே. சம்பத், மு. கருணாநிதி, என். வி. நடராசன், கவிப்புப்புலவர். கே. ஆர். ராமசாமி, இராமாமிர்தத்தம்மையார், சத்தியவாணிமுத்து, அனுமேலு அப்பாதுரை, வே. கு. பாண்டியன், வி. எம். மோகனவேல், கே. வி. ஜி. என். ராஜு, சே. அ. ராஜமாணிக்கம், க. தட்சணாமூர்த்தி, ரங்கூன். வி. சாமி, அரங்கண்ணல், ஜலகண்டபுரம். ப. கண்ணன், ஜி. பராங்குசம் வே. அ. இளஞ்செழியன், சென்னை கே. சிவஞானம், ஆர்க்காடு. பொன்னம்பலம். கி. டி. டி. அரசு, ஜி. பி. சோமசுந்தரம், எம், எஸ். மணி, மதுரை. எஸ். முத்து, விருதாசலம். வி. முனுசாமி, என். எஸ். இளங்கோ, இரா. இளம்வழுதி, ஆ. தங்கவேலு, நா. ஆவுடையப்பன், கே. இ. சம்மந்தன், சி. வி. ராசன், இ. எம். அனீபா, காஞ்சி. மணிமொழியார், ஏ. கே. சாமி, எஸ். எஸ். ராஜேந்திரன், ஆர். எம். வீரப்பன், கடலூர். எஸ். எஸ். சந்திரசேகர், கே. ஏ. மதியழகன், கே. எம். கண்ணபிரான், சி. எஸ். திராவிடமணி, ஏ. எல். ஸி. கிருஷ்ணசாமி, அ. பெ. தர்மலிங்கம், டி. எம். வி. ராசன், சென்னை. வி. முனுசாமி, போளூர். சுப்ரமண்யன், சென்னை. எ. ஜெபராஜ், ஏ. கிருஷ்ணசாமி, தில்லை—வில்லாளன், டி. எம். பார்த்தசாரதி, எஸ். எஸ். பி. லிங்கம், ஏ. எஸ். வேணு, எம். நமசிவாயம்,

(அடுத்த பக்கம் பார்க்க)

திராவிடநாடு

மலர் 11 | 27—7—52 | இதழ் 4

விலை இரண்டணா

செல்வோம்! வெல்வோம்!!

—❀—

ஆகஸ்டு 1

ஆரம்பமாகிறது, ஆற்றல் மிக்க திராவிடத் தோழர்களுக்கு 'அழைப்பு' விடுத்த வண்ணம். தாய்மொழியின் தொன்மையையும் தூய்மையையும் துச்சம் என்றெண்ணும், இந்தி ஏகாதிபத்யத்தை எதிர்த்து அறப்போர் துவங்குகிறது. அதிகாரம்—'கைக்கு' வந்த தெனும் திமிரால், எதையும், எப்படியும் செய்வோம் என்ற அரசியல் ஆணவத்தின் மீது அமர்ந்திருக்கும் அரசியலாருடன், நாம் போராட்டம் துவங்கிவிட்டோம்.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்போருக்கு இன்றுள்ள பலம், பிரசார சாதனம், அடக்குமுறை வசதி, எத்தனை யென்பதை யறிவோம்—எனினும். நமது தாயகத்தை அழிக்கும் தருக்கு மதியுடன் மோதுவதென்கிற முடிவுக்கு வந்திருக்கிறோம். அரசியல் வேட்டை, சுயநல லாபம். சூதாட்டம் ஆடும் பேதைகள் அல்ல நாம்—பழம் புகழ் வாய்ந்த மொழியையும் அதன் வழி அமைந்திருக்கும் பண்பாட்டையும் காப்பாற்றும் நன்னோக்குடன் பயணம் புறப்பட்டு விட்டோம். கழகம் துவக்கிய நாள் முதல் நாம் கொண்டிருக்கும் 'கண்ணியம்' 'சகிப்புத்தன்மை'—இவையிரண்டுமே, நமது கேடயங்கள். இவைகளை ஏந்தி, 'எதையும் தாங்கும் இதயம்' பெற்ற நாம், நம்மை அழித்துவரும் வடவரின் வெறியினை வீழ்த்தப் புறப்பட்டு விட்டோம். இரயில்வே நிலையங்களிலுள்ள போர்டுகளிலிருக்கும் இந்தி எழுத்துக்களை, அழிப்போம் — ஆகஸ்ட்டு முதல் தேதி. இதனை இழித்தும் பழித்தும் பேசப்படும்—எனினும் இவைகளைக் கண்டு கலங்காத உளம் வேண்டும். இந்தி வெறியினை எதிர்த்து, ஆகஸ்ட் முதல் தேதி, துவக்கும் அறப்போர் நிச்சயம் வெற்றியினையே தரும். ஆச்சாரியார், 'கட்டாய இந்தி'யை நுழைத்தபோது, ஆகஸ்டிலேதான், நமது அறப்போர் ஆரம்பித்தது. அப்போதிருந்தோர், நம்மீது வீசிய அடிகளையும், உடம்பிலே ஏற்படுத்திய தழும்புகளையும், ஒழுகிய இரத்தத்தையும் நாம் மறந்துவிடவில்லை. அதேபோல, கடைசியில் 'கட்டாய இந்தி'யை ரத்து செய்து, அவர்கள் முக்காடிட்டுக்கொண்ட காட்சியையும் மறந்துவிடவில்லை. 'ஆகஸ்டு' மீண்டும்! இப்போது, ஆச்சாரியார். முதன் முதலில 'இந்திக்கு வாயிலைக்காட்டிய, இவரது காலத்திலே மீண்டும் அறப்போர்! அவர். அன்று இருந்த, அதே இடத்திலிருக்கிறார்—நாமும் அதே நிலையில், ஆனால் பன்மடங்கு வலிவோடு எதிர் நிற்கிறோம்.

ரயில்வே போர்டு இந்தி அழிப்புப் போர், டில்லிபீடத்துக்கும், அவர்தம் 'திருவடி' தாங்கிகளாக இருப்போருக்கும், திராவிட சமுதாயம் தரும் எச்சரிக்கையாகும். இந்நிலை நமக்கும்—நம்மைச் சமாளிக்கவேண்டிய 'சென்னையாரு'க்கும் ஏற்படக் கூடாதென்றே, கோவில்பட்டியில் தி. மு. க. வேண்டிக்கொண்டது. பதிலில்லை, டில்லியிலிருந்து! கேலியை வீசிற்று!!—இப்போது, பாடம் கற்பிக்கும் வாய்ப்பினை, 'ஆகஸ்டு' தரப்போகிறது.

இந்த அறப்போரின் நோக்கம், நம்மை எல்லாத்துறைகளிலும் அமுக்கி ஆட்டிவரும் 'பாசிஸ்டு'களுக்கு புத்தி புகட்டவேயாகும். கொள்ளைக்காரரைப்போல நம்மை வஞ்சிக்கும் வடவரின் ஆதிக்கத்தைத் தகர்க்கவேயாகும்.

சீர்கேடுறும் திராவிடத்தின், பொது எதிரி, இந்தி ஏகாதிபத்யமே. வடவர் பிடியால்தான், வாடுகிறோம்—சாகிறோம். இந்தப் பொது எதிரியின் ஆதிக்க ஆசையைத் தகர்க்கும், போராட்டமே, 'ஆகஸ்டு'ப் போர்.

கோவில்பட்டியிலே நடைபெற்ற மாநாட்டில் நாம் விடுத்த எச்சரிக்கையும் 'ஆகஸ்டு' மாதத்தில்தான். இன்று, துவங்கும், அறப்போரும் ஆகஸ்டு மாதத்தில்தான். ஆச்சாரியார் காலத்தில் துவங்கியதும் ஆகஸ்டில்தான். உறுதியோடு நமது அறப்போர் ஆரம்பமாகிறது. நமது எதிரியின் வெறியை அடக்க, பெரியார் அவர்களும், 'ஆகஸ்டு முதல்தேதி'யை குறிப்பிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். 1950 ஆகஸ்டில், நாம் எச்சரித்தோம்! 1952 ஆகஸ்டை அவர் தேர்ந்தெடுத்திருக்கிறார்! இரட்டைக்குழல் துப்பாக்கி—வடநாட்டு ஆதிபத்யத்தின்மீது தாக்கப்போகிறது. மகிழ்கிறோம்!

பொது எதிரியை வீழ்த்த, நாமும் அந்த நாளில், நம்மாலான சேவையைச் செய்வோம். துள்ளிக்குதிக்கும் இந்தி ஆதிக்கத்தின் துடுக்கடக்கிடுவோம்.

ஆகவே, என் அருமைத் தோழர்களே! வீர வாலிப நண்பர்களே! 'ஆகஸ்டு'—ஆயிரமாயிரம் இளைஞர்கள் ஆர்வத்துடன் உள்ளனர் என்பதை, சர்வாதிகாரப் பித்தர்களுக்கு உணர்த்தட்டும்—வடநாட்டு கும்பலுக்குத் தெரிவிக்கட்டும்.

ஆகஸ்டு முதல் நாள்—கழகக் கொடியை மனதிலே நினைத்து, அதன் ஒரு பாதியிலே நெளியும் சிகப்பு நாம் சிந்திய இரத்தம் என்பதை மறவாமல், தாரும் பிரஷுமாகப் புறப்படுங்கள்! 'இந்தி'யினை அழியுங்கள்!—ஆனால் சிறிதும் கண்ணியத்தவறோ, அசம்பாவிதமோ ஏற்பட்டுவிடின் அது, நம் கொள்கைக்கே மாசு கற்பிக்கும். சினம் வேண்டாம்—கட்டுப்பாட்டைக்காட்டுக. கடமை உள்ளம் கட்டாரத்தையும்—தாண்டிச் செல்ல சக்தி தரும். இதை மனதிலே எண்ணுங்கள்—படை வரிசைக்கு தயாராக நில்லுங்கள்.

'ஆகஸ்டு' ஆரம்பமாகிறது! செல்வோம்! வெல்வோம்!

அன்பன்,

அண்ணாதுரை.

வேண்டினோம் — எச்சரித்தோம் — இன்று, போர்!

[பெத்துநாயக்கன் பேட்டை (சென்னை)யில் 23—7—50-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு வெற்றிக்களிப்பு நாளில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை இவ்விதம் வெளியிட்டார்.]

"கட்டாய இந்தி கூடாது என்று கூறியது நாம்தான் — எனவே, மகிழ்கிறோம் இன்று 'இந்தி கட்டாயமில்லை' என்று சர்க்கார் பணிந்திருப்பதைக் கண்டதும். பத்து ஆண்டுகட்கு முன்னரே இந்தி கூடாதென்றோம் — ஆச்சாரியார் ஆணவத்தோடு நம்மைப் பார்த்தார். தாளமுத்து, நடராசன் இந்திக்காகப் பிணமாயினர்! 'சப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி எத்தனை பட்டாளம் கூட்டி வரும்' என்று கூவியவணணம் ஆயிரக்கணக்கில் சிறை சென்றோம். இந்தி வீழ்ந்தது! நமது அறப்போர் — இதயத்தின் துடிப்பு. எனவே, வெற்றியைக் கண்டதும், மகிழ்கிறோம். இந்த மகிழ்ச்சியான நேரத்தில் மற்றொன்றும் உங்கட்குத் தெரிவித்துவிட ஆசைப்படுகிறேன். இப்போதிருக்கும், வெற்றிக் களிப்பால் கலை மோதும் நாம், இன்னும் பற்பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்தி ஆதிபத்யம், ஒரு துறையில் முறியடிக்கப்பட்டுவிட்டது. இதனால், இங்கிருந்து, இந்தி ஆதிபத்யமே ஓடிவிட்டது என்று எண்ணிடாதீர்கள். இன்னும் பற்பல துறைகளில் அது நமமைக் கடித்துக்கொண்டே இருக்கிறது. இரயில்வே நிலயங்களைப் பாருங்கள். தமிழ் உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்திக்கு முதலிடம் தமிழுக்கு கீழிடமும தரப்பட்டிருக்கிறது. அம்முறையைக் காண்போர் இதயம் துடிக்காமலா இருக்கும். தலைப்பிலே வேண்டுமென்றே இந்திக்கு இடம் தந்து, தாய் மொழியைத் தாழ்த்தியிருக்கிறது, வடநாட்டு ஆதிபத்யம். இதுபற்றி, ஏற்கனவே பலமுறை எடுத்துக் காட்டி வந்துள்ளோம். இருந்தும், இந்த அநீதி, திருத்தப்படவில்லை. எனவே, ஆணிக்கும் இந்த நேரத்தில், ஆளவந்தாருக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறோம்—போர்டுகளை மாற்றி, தமிழில் பெயர்கள் தலைப்பில் பொறிக்கப்படவேண்டும் என்பதாக. இந்தி கட்டாயமாக்கப் பட்டதும் 'வேண்டாம்' என்று அன்போடு தான் சொன்னோம். கேட்கவில்லை தொல்லையை வளர்த்துக்கொண்டு. திண்டாடினர் ஆளவந்தார். இப்போதும் அன்போடு வேண்டுகிறோம், 'தாய் மொழியைத் தாழ்த்த வேண்டாம் — தமிழர் இதயங்களைப் புண்படுதத வேண்டாம்' என்று. இந்த வேண்டுகோளுக்கு, முன்னர் போல இல்லாமல், இப்போது சர்க்கார் இணங்கும — அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமென்று எதிர்பார்க்கிறோம். 'இல்லை. முடியாது. நேரமில்லை' என்று என்று சர்க்கார் சொல்லுமேயானால், சென்னை சர்க்காருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன் தயவு செய்து, அதற்கான அனுமதியைத் தந்துவிடட்டும்—நாம், தார் தொட்டி ஒரு கையிலும் பிரஷ் இனனொரு கையிலுமாக எடுத்துக் கொண்டு கிளம்புவோம்—நாமே பெயர்களை மாற்றி எழுதவோம்!"

❀

[கோவில்பட்டியில் 1950 ஆகஸ்டு 27-ல் நடைபெற்ற நெல்லை மாவட்ட தி. மு. க. முதலாவது மாநாட்டின்போது பொதுச் செயலாளரும், செயற்குழுவும் விடுத்தது, இது.]

"இரயில்வே நிலைய போர்டுகளில் தமிழைத் தாழ்த்தியிருக்கும் அநியாயத்தைக் குறித்து, சென்னையிலே நடைபெற்ற இந்தி எதிர்ப்பு வெற்றி விழாவிலேயே நான் குறிப்பிட்டேன்—இங்கு பேசியமது தோழர்களும ஆதங்கத்தோடு ஆவேசக் குரல் எழுப்பினர். அது பற்றியும் நாம் ஒழுங்கான நடவடிக்கை எடுக்கவேண்டியவர்களாகிவிட்டோம் தலைப்பில் இந்தியில் ஊர்களின் பெயர்களையும், கீழே தமிழில் பெயர்களையும் எழுதியிருக்கும் முறை நம் தாய் மொழியை அவமானப்படுத்துவதாக மட்டுமல்ல, நமது சுயமரியாதைக்கே தீங்கு விளைவிக்கிறது. 'நமக்கு மானமுண்டா?' என்று கேட்பது போலிருக்கிறது. இந்த அநியாயத்தை அவமானத்தைத் துடைக்கத்தான் வேண்டும் — தூங்கிக்கொண்டிருக்க முடியாது! செயற்குழு இன்று நிறைவேற்றும் தீர்மானத்தையொட்டி இரயில்வே போர்டாருக்கும் மத்திய ஆளவந்தாருக்கும் நோட்டீஸ் தரப்போகிறோம். ஆட்சியாளரிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைக்காவிட்டால் போர்டு அழிப்பு போராட்டம் குறித்து முடிவு கட்டியே தீருவோம்"

1950 ஆகஸ்டு 27-ல் கோவில்பட்டியில் நடைபெற்ற நெல்லை மாவட்ட தி. மு. க. முதலாவது மாநாட்டில் பேசிய பொதுச் செயலாளர் சி. என். ஏ எச்சரித்தார், ஆளவந்தாரை. அன்று, அங்கே கூடிய தி. மு. க. செயற்குழு, இந்தி எழுத்து அழிப்பு குறித்து, தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியது. அத்தீர்மானம்:—

திராவிடரின் தன்மானத்தைச் சிதைக்கும் விதமாகவும், இந்தி ஆதிபத்யத்தைப் புகுத்தும் முறையிலும், இரயில்வே ஸ்டேஷன்களில் இந்தியில் முதலிடமாகப் பெயர் பொறித்திருப்பதைத் திராவிடர்கள் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று சர்க்காருக்குத் தெரிவிக்கிறது.

(அ) இந்த முறையை உடனே மாற்றித் தமிழுக்கு முதலிடம் இருக்கும்படி போர்டுகளைத் திருத்துமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) இதற்காக; சர்க்காரிடம் கடிதப்போக்குவரத்து நடத்த பொதுச் செயலாருக்கு அதிகாரம் அளிக்கிறது.

(இ) சர்க்கார் இதற்கு இணங்காவிட்டால், செயற்குழு, இந்த இழிவு நீக்கத்துக்காக நேரடி நடவடிக்கை நீட்ட வேண்டும் என்று செயற்குழு தீர்மானிக்கிறது.

❀

ஆட்சியினர், உணரவேண்டும். பலகூட்டங்களில் வேண்டினோம் — கோயில்பட்டியிலே எச்சரித்தோம்—எழுதிக் கேட்டோம். எதற்கும் இணங்கவில்லை — வடநாட்டு ஆதிக்கம். ஆகவேதான், இன்று, அறப்போர் — அதில் நாம் அனைவரும் ஈடுபடுகிறோம்.

❀

[26—7—52-ல் சென்னை அறிவகத்தில் நடைபெற்ற பொதுக்குழு உறுப்பினர்களிடையில், பொதுச் செயலாளர் குறிப்பிட்டது, இது.]

"ரயில்வே போர்டுகளில் இந்திக்கு முதலிடம் தரப்பட்டிருக்கும் கொடுமையை, கட்டாய இந்தி ரத்து செய்யப்பட்ட வெற்றிவிழா நாளில், பேச்சையில் குறிப்பிட்டேன். அது முதல் நமது கழகக் கூட்டங்களிலெல்லாம், இந்த இழிவை சர்க்கார் நீக்கிட வேண்டுமென்று பேசினோம். பிறகு, கோவில்பட்டியிலே கூடிய செயற்குழுவிலே, 'தார்சட்டி ஏந்துவோம்!' என்று சர்க்காருக்கு எச்சரிக்கை விடுத்தோம். அந்த தீர்மானப்படி, மத்யசர்க்காருடன் கடிதப்போக்குவரத்தும் செய்தோம். இந்த நேரத்தில், ஆர்வ உணர்ச்சியின் மிகுதியால், பலப்பல இடங்களில 'இந்தி' எழுத்துக்கள் அழிக்கப்படுவதாக அறிந்தோம். மத்ய சர்க்காரோ, தக்கபதில் தரவில்லை. இந்நிலையில். அன்று நாம பற்பல போராட்டங்களை மேற்கொண்டிருந்தோம். கருப்புக்கொடி பிடிப்பது! 144 மீறுவது! எழுத்துரிமைக் கிளர்ச்சி! — இவ்விதம், நாம பலகாரியங்களை மேற்கொண்டிருந்ததால், இந்தி போர்டு அழிப்பு சம்பந்தமாக, போதிய அவகாசத்தோடு, தீவிரமான கிளர்ச்சியைத் துவக்கவேண்டும் என்கிற கருத்துக் கொண்டிருந்தோம். ஆனால், இன்று, நமது கோவில்பட்டித் தீர்மானப்படி 'இந்தி போர்டு அழிப்பு' திட்டப்படி பணியாற்றப் போகிறோம். நமது மேற்படி திட்டத்தை, பெரியார் அவர்கள், ஆகஸ்டு முதல் தேதி முதல் துவக்கப்போவதாக அறிவித்துள்ளார்கள். இந்தத்தகவல் கேட்க, மிகவும் மகிழ்கிறோம் — இம்முடிவைச் செய்த திராவிட கழக நண்பர்களைப் பாராட்டுகிறோம். நமது போராட்டம், துவங்கப்படப்போகிறது. இந்த அறப்போரின் விளைவை வடநாட்டு ஆதிக்கம் உணரும்படிச் செய்யவேண்டும். ஆகஸ்டு முதல் தேதி — ஒரு எச்சரிக்கைதான். அன்று நமது எதிர்ப்பின் அடையாளப்போர்! இந்த ஆகஸ்டு முதல்நாள் போரில், திராவிட முன்னேற்றக் கழகம் தீவிரமாகக் கலந்துகொள்ள வேண்டுமென்று எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மவட்டச் செயலாளர்களும், கழகப்பேச்சாளர்களும, செயற்குழு உறுப்பினர்களும், ஆகஸ்டு முதல் தேதிய உரிமைப்போரில கலந்துகொள்ளவேண்டும். நமது இலட்சியம் கொள்கைக்காக போராடுவதுதான் ஆகஸ்டு-முதல் தேதியில திராவிட கழகம் ஒரு பக்கமும் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றொரு பக்கமுமாக —பொது எதிரியைத் தாக்கும். நான் அடிக்கடி கூறிவருவதுபோல, 'இரண்டு ஈட்டிகள்'—இந்தி ஆதிபத்யத்தின்மீது, ஒரே நேரத்தில் தாக்கும். நமக்கு இந்தி ஆதிபத்யத்தால் ஏற்படும் இன்னல்கள் ஏராளம்! இந்தப்பொதுவிரோதிக்கு நமது கிளர்ச்சியின் வேகம் தெரிவிக்க வேண்டும். ஆகவே தோழர்களே! யாவரும், அன்று, அறப்போரில ஈடுபட அழைக்கிறேன். பொதுக்காரியம் இது. பேதமின்றி எவரும் போராடலாம்! நெடுநாட்களாக நமது உள்ளத்தைக் குடைந்துவரும், ஒரு விஷயத்துக்காக நாம் போராடப்போகிறோம். இந்தப் போராட்டத்தைத் துவக்க, இன்று நாம், முடிவு செய்வது — திடீர் முடிவல்ல. இதை

முன் பக்கத் தொடர்ச்சி

பாலசுந்தரம், டி. வி. நாராயணசாமி, அ. பெ. அரசு, எம். எஸ். முத்து, சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சி டி. சபாபதி, ஆ. சுந்தரமூர்த்தி ஆகியோரும், மற்றும் சென்னையிலுள்ள, கழகத் தோழர்கள் பலரும் வந்திருந்தனர்.

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், திருவண்ணாமலை ப. உ. சண்முகம், அ. பொன்னம்பலனார், ஈரோடு எஸ். ஆர். சந்தானம், சி.பி. சிற்றரசு, சிவசண்முகசுந்தரன், ஏ. கே. வேலன் ஆகியோர், தாங்கள் வரமுடியாமைக்கு வருந்தியும், கூட்டத்தில் நிறை வேற்றும் தீர்மானங்களுக்குக் கட்டுப் படுவதாகவும் தந்தி,கடிதம்மூலம் தகவல் தந்திருந்தனர்.

கூட்டம், துவங்கியவுடன், பொதுச் செயலாளர் சி. என். ஏ., [illegible]டியில், தி. மு. க. [illegible] ரயில்வே நிலயங்களி[illegible]ப் பெயர் பலகைகளிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிப்பதென்று தீர்மானித்ததை, ஆகஸ்ட் 1ந்தேதி முதல் பெரியார் ஈ. வே. ரா, திராவிடர் கழகத்தின் நடைமுறையாக்குவதாக அறிவித்துள்ள நிலையில், தி. மு. க. கழகம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தோழர்களின் கருத்துரைகளைத் தரும்படிக் கேட்டுக் கொண்டார்.

கருத்துரை தந்தவர்கள் விவரம்:- என். வி. நடராசன், ஜி. பாலகுசம், ஜி. பி. சோமசுந்தரம், அம்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி, தா. ஆவுடையப்பன், எஸ். முத்து, ஏ. எஸ். பி. கிருஷ்ணசாமி, கோபி. ராஜு, மு. கருணாநிதி, இரா இளம்வழுதி, கே. ஏ. மதியழகன், ஈ. வே. கி. சம்பத், சி. வி. எம். அண்ணாமலை, கே. ஆர். ராமசாமி, டி. வி. நாராயணசாமி, ராமாமிர்தம்மையார் வேலூர் இளஞ்செழியன், ப. கண்ணன், கே. கே. நீலமேகம், விருத்தாசலம் முனுசாமி, திண்டிவனம் ஆ. தங்கவேல்.

இறுதியாக, சி. என். எ. அவர்கள், ஆகஸ்ட் 1 தேதி, ரயிலவே நிலயங்களிலுள்ள பெயர்ப் பலகைகளிலுள்ள இந்தி எழுத்து அழிப்புப் போரில் தி. மு. கழகம் பங்கு கொள்ள வேண்டிய அவசியத்தை விளக்கியும், இந்த அறப்போரில் தி மு. கழகம் முழு மூச்சுடன் இறங்கி: பணியாற்ற வேண்டியதின் இன்றியமையாமை குறித்தும் பேசினார்.

ஆகஸ்ட்டு 1ல், தி. மு. கழகம், ரயில்வே நிலைய பெயர்ப் பலகையிலுள்ள இந்தி எழுத்து அழிப்புப் போருக்கு, தமது முதல் படையாக, ஒரு படையை அனுப்பி வைப்பதெனவும், அப்படை, நாட்டின் முக்கிய நகரங்களிலுள்ள ரயில்வே நிலயங்களில் இந்தி எழுத்து அழிப்பு அறப்போரை நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டு, தோழர்கள், தங்களுடைய பெயர்களை 'அறப் போர்' பட்டியலில் குறித்துக் கொடுத்துவிட்டு. விடைபெற்றனர்.

இந்த முடிவையொட்டி, பொதுச் செயலாளர் இடும் கட்டளைகளை ஏற்று நடப்பதென உறுதி கூறினர். ஆலோசனை கூட்டம் மாலை 6—மணிக்கு முடிந்தது.

★

ஏஜண்டுத் தோழர்களுக்கு

அடுத்த இதழும் இவ்வாரம் போலவே திங்களன்று (4—8—52) தான் இங்கிருந்து அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, ஏஜண்டுகள் தங்களுக்குத் தேவையான பிரதிகளுக்கு உடனே எழுதும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

—நிர்வாகி.

ஒரு கனவு

வேலாயுதம், எங்கே?

[வண்டு]

“வேலாயுதம்! வேலாயுதம்! வேலாயுதத்தைத் தேடுகிறேன். எங்கே வேலாயுதம்?” என்று, கோபத்தோடு, கேட்டார் சுப்பிரமணியம்.

“யார் அவன் வேலாயுதம்?”—என்று, வேதனையோடு கேட்டாள், அவரது பார்யை தெய்வயானை.

“அவனு? அடி மண்டு! உன்னைக் கட்டிக்கொண்டு மாரடிக்கிறேனே...” என்று தலையிடித்துக் கொண்டு, மயிலிடம் போனார். மயிலும் பாம்பும், அங்கே, சண்டை போட்டுக் கொண்டிருந்தன! ‘ஏய்! சும்மா இருக்கமாட்டீங்க’ என்று அதட்டிவிட்டு, வள்ளியின் அறைக்குள் சென்றார். அவர், அங்கே போவதைக் கண்ட தெய்வயானை, முகத்தைத் திருப்பிக் கொண்டாள், சனிபோழ்! வள்ளி, அறைக்குள் தூங்கிக்கொண்டிருந்தாள்—இரவு நெடுநேரம் கண் விழித்ததால்ஏற்பட்டகளைப்பு, அவளுக்கு. உள்ளே நுழைந்த சுப்பிரமணியம் ஒரு விநாடி திகைத்து நின்றார்! வேலாயுதத்தின் நினைவை விட அந்த வேல்விழியின் அழகு அவருக்குப் போதையை ஏற்றியது!! அவள் பக்கத்தில் அமர்ந்தார். “வள்ளி! வள்ளி!!” என்று அழைத்த வண்ணம், அவளை அணைத்தார். போர்வையை எடுத்துவிட்டு துள்ளி எழுந்தாள், அவள். ‘காலை நேரத்திலே என்ன, இது? என்று கேட்ட வண்ணம். ‘ஒன்றுமில்லை, வள்ளி! என் வேலாயுதத்தைப் பார்த்தாயா?’ என்று ஏமாற்றக் குரலில், கேட்டார்.

“வேலாயுதமும் சூலாயுதமும்! இந்தவிடியற்காலையில் என்ன உமக்கு?” என்றுகேள்வியைப் பூட்டினாள், அவள்.

“அவசரமாகத் தேவை!” என்றார், பார்வதி மைந்தன்.

“ஏன், நாதா? இப்போது எந்தச் சூரன் கிடைத்திருக்கிறான் சம்ஹாரம், செய்ய?”

“சூரனல்லடி—சூதன்!”

“சூதனு?”

“ஆமாம்! என் பெயரைச் சொல்லிக் கொண்டு, சில பேர், கிளம்பியிருக்கிறார்கள் பூலோகத்திலே—காலையில் தகவல் வந்தது நாரதன் சொன்னான்”

“அவன் நாசமாகப் போக! கலகத்தை ஆரம்பித்துவிட்டானு?” என்று கூறியவண்ணம், வள்ளி கேட்டாள்.

“யார் தங்கள் பெயரை வைத்துக் கொண்டிருக்கும் சூதன்? ஒருவேளை, அந்தச் சுப்பிரமணியத்தைச் சொல்கிறீர்களோ?”

“எந்தச் சுப்பிரமணியம்? — பூலோகத்தில் எத்தனையோ சுப்பிரமணியம் இருக்கிறார்களே!”

“சென்னையிலே மந்திரியாக இருக்கிறாரமே ஒரு சுப்பிரமணியம்—அவரையோ என்று கேட்டேன். அந்த ஆள்மீது, அதிக வரி போடுகிறார் என்பதால், மக்களுக்கு ஆத்திரமாம்—‘நல்ல சுப்பிரமணியம்டா’ என்று ஊரெல்லாம் சபிக்கிறதாமே! அவரையோ என்று கேட்டேன்” என்றாள், அந்தக் குறமகள்.

வள்ளிநாயகன், சிறிதுநேரம்சிந்தனையில் ஆழ்ந்தார். தெய்வயானையின் குரல்கேட்டது. ‘காலையிலே என்ன? பஞ்சாமிர்தமா! பழரசமா!!’ என்று உள் அறையிலிருந்தபடியே விசாரித்தாள்—கொஞ்சம் எரிச்சலோடு. பதில் சொல்லவில்லை, முருகன். கோபம், அதிகமாயிற்று! வள்ளி சொன்னாள் “அவள் கத்துகிறாளே—வாய்திறந்து ஏது வேண்டும் என்று சொன்னால்தானே தயாரிப்பாள்!” என்று, சக்களத்திக்காகப் பரிந்து பேசினாள், அவள். “பஞ்சாமிர்தமும்! பழரசமும்!!” என்று பெருமூச்சு விட்டார், கந்தன்.

“ஏன் கண்ணாளா! ஒரு மாதிரியிருக்கிறீர்கள்? நாரதன் கலகம் நமக்குத் தெரியாததா! வம்பன். அவன் வார்த்தைக்காக வருந்தலாமோ, தாங்கள்”

“அவனால் அல்லடி வருத்தம்! என்னென்ன பித்தலாட்டம் நடக்கிறது தெரியுமோ, பூலோகத்தில். பயமாயிருக்கிறது. பதைக்கிறது, அதை நினைத்தால்”

“நாஸ்திகர்களைப் பற்றிச் சொல்கிறீர்களோ? அவர்களுக்காகத்தான் வேல் ஆயுதத்தைத் தேடினீர்களோ!”

“அவர்கள் பரவாயில்லை, வள்ளி! தங்கள் போதனையைச் செய்து கொண்டு போகிறார்கள். ஆனால் நமக்கு பாலாபிஷேகமும் பஞ்சாமிர்தமும் செய்து படைக்கிறார்களே, பக்தர்கள்—அவர்களை நினைத்தால் உடம்பெல்லாம் வேகிறதடி!”

“பக்தர்களையா குறை சொல்கிறீர்கள்! பாவம், அவர்கள், நல்லவர்கள் நாதா.”

“நீ பேதையடி, வள்ளி! இந்தா, இதைப்பார்” என்று, 18—7—52 ‘சுதேசமித்திரன்’ பத்திரிகையை எடுத்துத்தந்தார். வள்ளி, படித்தாள்.

சென்னை ஜூலை 17

“ஆரோக்கிய ஆஸ்ரமம் என்கிற மணி மந்திர ஒளஷதாலயத்தின் ஆதரவில் ஆடிக் கிருத்திகையை முன்னிட்டு சென்ற 48-நாட்களாக நடைபெற்றுவந்த யோக க்ஷேமார்த்த ஸஹஸ்ரநாம வேலாயுத பூஜை 17—7—52 அன்று பூர்த்தியாகியது. பூஜையில் வைக்கப்பட்ட 1008 வெள்ளி வேல்கள் 13—8—52 அன்று இலவசமாக மெய் அன்பர்களுக்கு அளிக்கப்படும்.”

இதைப் படித்துவிட்டு வள்ளி, மணாளனைப் பார்த்தாள்—விசாரத்தோடு.

“விபரம் அறிந்தாயா? இது தான் நமது பக்தர்களின் பக்திப் பிரவாகம்! இதைத்தான் நாரதன், சொல்லிவிட்டுப்போனான். ஆயிரத்தெட்டுவேல்! அதுவும் வெள்ளியால் செய்தது!!”

“ஆமாம், நாதா! அக்கிரமமாக இருக்கிறதே—ஏன், இப்படிச் செய்கிறார்களாம்?”

“அதுதானடி, எனக்கும் தெரியவில்லை! வெள்ளிவேல், எதற்கு? துஷ்டநிக்ரசிஷ்டபரிபாலனம்செய்ய அது பயன் படுமோ! அப்படியே பயன் படுகிறதென்றாலும் 1008 வேல்களையும் எடுத்துக்கொண்டு எந்தத் துஷ்டர்கள்மீது பாயப் போகிறார்கள்?”

“வெள்ளிவேல் — அதுவும் இலவசமாமே, நாதா!”

“பாரடி, பார்! பழனியிலே விபூதிக்குக்கூட காசுதந்து வாங்கிப் போகிறார்கள். ஆனால், இங்கே, வெள்ளியாலேசெய்து இலவசமாகத்தருகிறார்கள்!”

“இதுதான் நாதா, எனக்கும், சந்தேகமாக இருக்கிறது. ஒருவேளை, இப்படி வெள்ளிவேல் செய்து வினியோகிக்க வேண்டும் என்று பணம் வசூலித்திருப்பார்களோ!”

“இருக்கும் — இருக்கும். நாரதனைக் கேட்கவேண்டும். சோழியன் குடுமி சும்மாவா ஆடும்! விபூதிக்கே, பணம் வசூலிக்கும் பக்தர்கள், வெள்ளியை இனமாகவழங்குவதென்றால் அதில் ஏதோ இருக்கத்தான்,வேண்டும் வள்ளி!”

ஆரோக்ய ஆஸ்ரமமே, அதன் பெயர்”

“ஆரோக்ய ஆஸ்ரமத்துக்கும் வெள்ளிவேல் வினியோகத்துக்கும் என்ன சம்பந்தம்? வெள்ளிவேல் பெற்றவர் வியாதியில்லாமல் வாழ்வார்! அல்லது வெள்ளிவேல் பெற்றோர், அதைப் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டப் போகின்றனரா!”

“வெள்ளிவேல் எங்கெங்கு போகப் போகிறதோ, எவரெவர் கையில் கிடைக்கப் போகிறதோ! கூத்திக்கு காசாக மாறுமோ? மனைவிக்கு ரவிக்கையாகமாற்றப்படுமோ! யார் கண்டார்கள்?”

“இதுதானடி! என்னைத் துளைக்கிறது. என் பெயரைச் சொல்லி, இவர்கள் செய்யும் சூதினைக் கண்டாயா! இவர்கள் பக்தர்களாம்! பிறரைப் பாவிகள்என்கிறார்கள். ஆனால் 1008 வேல்கள்—அதுவும் வெள்ளி வேல்—இனமாக வழங்கப்படுமாம்! இந்த ‘இனமாக வழங்க’ எவ்வளவு பணம் திரட்டினரோ?”

“பகற் கொள்ளைதான்! ஒரே அக்கிரமமா இருக்கு நாதா!!”

“இப்படி அக்கிரமம் செய்றவா, அசுரா இல்லே! நமது பக்தர்கள்!!”

“பக்தர்களைவிட, அவர்களைதேவலாம்போலிருக்கே!”

“நன்றாகச் சொன்னாய், வள்ளி! அவர்கள், இதுபோல எந்தவிதப் பித்தலாட்டமும் செய்வதில்லை. அவர்கள் பேசும்போது, கேட்டால் நியாயமாகத்தான் இருக்கு”

“பிறகு அவர்களைத் துஷ்டர்கள் என்கிறார்களே: இவர்கள்?”

“அப்படிச் சொல்லாவிட்டால் பக்தர்கள் காலட்சேபம், நடக்குமோ?”

“பக்தர்களாம் பக்தர்கள்! பதிதர்கள்!! ‘பகவான்’ பெயரைச்சொல்லி படுகொள்ளை அடிப்பவர்கள்”

கோபத்தோடு எழுந்தாள் வள்ளி. விசாரத்தோடு படுக்கையில் சாய்ந்தார் சுப்பிரமணியம். வேலாயுதம், அவர் நினைவில் இல்லை! விசாரம், நிரம்பியிருந்தது!!

✱

திருமணம்

கடந்த 10-7-52 வியாழனன்று காலை 8-30 மணிக்கு வில்லியனூர் தாசில்தார் பி. ஆதிமூலம் பிள்ளையின் செல்வி கமலாவைத் திரைப்பட எழுத்தாளர் [illegible] தம் வாழ்க்கைத் துணையாக மயிலை-சிவமுத்து முன்னிலையில் ஏற்றுக் கொண்டார். விழாவிற்குத் தலைமை வகித்த சிவமுத்து மணமக்களைப் பாராட்டிப் பேசினார். தொடர்ந்து வல்லை-பாலசுப்பிரமணியம், வ.ப்ர. தாமரைக்கண்ணியம்மையார், புலவர்-கிருட்டிணன், [illegible] அறிவழகன் முதலியோர் பேசினர். முடிவில் மணமகளின் தமையனார் திரு. சீனிவாசன் நன்றி கூறினார். திருமணத்திற்கு இயக்கத் தோழர்களும், பிரமுகர்களும், மாணவ நண்பர்களும் வந்திருந்தனர். மணமக்களைப் பாராட்டிப் படத்தொழிலுள்ளாரும், பத்திரிகாசிரியர்களும், நண்பர்களும், ஆசிரியர்களும் தங்கள் வாழ்த்துக்களையும், பரிசுகளையும் அனுப்பிச் சிறப்பித்தனர்.

கடவுள் விஷயம்: தி. மு. க. வெற்றி

“சத்தியமாகச் சொல்லுகிறேன் என்று சொல்லும்”

“உண்மையாகக் கூறுகிறேன்”

“அப்படிக் கூறக்கூடாது. ‘சர்வ வல்லமையுள்ள கடவுள் ஆணையாகக் கூறுகிறேன்’ என்று சொல்லும்”

“சர்வவல்லமையுள்ள நீதியின் பெயரால் கூறுகிறேன்”

✱

கோவை நகர மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், நடைபெற்ற நிகழ்ச்சி இது. ‘கடவுளுக்குப் பதில்’ ‘நீதி’யின் துணை நின்றார், கோவை மாவட்ட தி. மு. க. செயலாளரான தோழர் எஸ். ஏ. ராஜமாணிக்கம். கோவைநகர திராவிட முன்னேற்றக்கழக அலுவலகத்தைத் தாக்கி கழகக்கொடியை எரித்து காங்கிரசார் திருவிளையாடல் புரிந்தார்களல்லவா? அது சம்பந்தமாக தொடரப்பட்டிருந்த வழக்கில், தோழர், போலீசார் தரப்பில் சாட்சியம்கூற அழைக்கப்பட்டிருந்தார். அங்கு தான் மேற்படி சம்பவம் நடைபெற்றது. ‘கடவுளுக்கு’ பதிலாக ‘நீதி’யை அழைத்த நமது நண்பர் மீது கோர்ட்டை அவமதித்தார் என்று குறை கூறப்பட்டது,மாஜிஸ்டிரேட் அவர்களால்.

✱

“நாஸ்திகன் இவன்! கடவுளை மறுக்கிறான். நீதிதான் கடவுளாம்! செப்புகிறான், நீசன். நெற்றிக் கண்ணுடையான், நீண்டசூலமுடையான், பிறைசூடி எம்பெம்மானை அவமதித்தான். அராஜகன்!” இது போலச் சீறுகின்றனரல்லவா, கடவுளின் வாதாடிகள் எனத் தம்மைக் கருதித் திரிவோர். ஆனால் அவ்விதம் கூறவில்லை அவர், இவ்விதம் கூறினார்.

“கோர்ட்டை அவமதித்துவிட்டார் ராஜமாணிக்கம். ஆகவே இந்தக்குற்றத்துக்காக ரூ. 50 அபராதம் கட்டவேண்டும். தவறினால், ஆறு வார வெறுங்காவல் தண்டனை அனுபவிக்கவேண்டும்”

✱

“அபராதம் கட்ட முடியாது சிறைக்குச் செல்கிறேன்” என்று தோழர் சென்றார். ஆனால், மேற்படி ‘கடவுள்’ விஷயம் குறித்து நீதிமன்றங்களின் நிலையைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று பலர் வலியுறுத்தியதின்பேரில், ஜாமீன் தந்து, தீர்ப்பை ஆட்சேபித்து ஜில்லா நீதிபதிக்கு அப்பீல் செய்துகொண்டார் — தி. மு. க. பொதுச்செயலாளரின் அனுமதியோடு. என்ன தீர்ப்பு கிடைக்கிறது என்பதையும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம்! ஜூலை [illegible] இது சம்பந்தமாக கோவை ஜில்லா மாஜிஸ்டிரேட் அளித்திருக்கும் தீர்ப்பு, இது:

“கோர்ட்டுகளில் கடவுள் மீது ஆணையிட்டுப் பிரமாணம் எடுக்க வேண்டியதில்லை. ஆகவே [illegible] கோர்ட்டில் ராஜமாணிக்கம் நடந்து கொண்டது கோர்ட்டை அவமதிப்பதாகாது. எனவே கீழ்கோர்ட் விதித்திருந்த தண்டனையை ரத்துசெய்கிறேன்”

✱

தனக்குத் தெரிந்த [illegible] உண்மையைக் கூறுவதாகவும் [illegible] கூறுவது உண்மையைத் [illegible] வேறல்லவென்றும் உறுதி [illegible] தான் ‘பிரமாணம்’ [illegible] நேர்க்கமாகும் [illegible] கோர்ட்டை அவமதித்த [illegible] மென்று, குற்றம் [illegible] கொட்டப்பட்டார் — 10 [illegible] அன்று. இப்போது, “[illegible] நிரபராதி என்று கூறி [illegible] வழக்கில் வெற்றிகண்ட [illegible] யும், வழக்கை நடத்திய [illegible] கழகத்தினரையும் பாராட்டு [illegible] நீதி வேண்டி [illegible]

'எடு மாலை! போடு எனக்கு!'

[அண்ணல்]

[1]

"இரண்டுகோடிரூபாய், போலீஸ் இலாகாவுக்கென அதிகம் செலவழிப்பதேன்? என்று கேட்டதற்கு கம்யூனிஸ்டுகளுக்காகச் செலவழிக்கப்படுவதாக, அப்போதிருந்த கோபால ரெட்டி கூறினர். ஆனல் என்ன பலன்? அப்போது இருவர் தான் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சட்டசபையில் இருந்தனர். ஆனல், இரண்டுகோடி செலவழித்த பின் இப்போது எத்தனை பேர்? 62 பேர்கள் சட்டசபையில்!"

[2]

"முந்தியசர்க்கார்கம்யூனிஸ்டுகளை முறியடிக்க 2கோடி ரூ. செலவிட்டதாயும், ஆனல் 70 பேர் சட்டசபைக்கு வந்திருப்பதாகவும் கூறப்பட்டது. இதை நான் 'எங்களது வெற்றி' என்று கூறுகிறேன்! வெளியிலிருந்த 70 கம்யூனிஸ்டுகளை '2 கோடி ரூபாய் இழுத்துவிட்டது. பார்லிமெண்டு முறையில் வேலை செய்ய அவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதை அவர்கள் பயன்படுத்திக்கொள்வார் என்று நம்புகிறேன்."

★

"குதித்தான். கொக்கரித்தான். குப்புற வீழ்த்தினேன்!"

"பெருமை பேசாதேடா, தம்பி! நான் என் குப்புற வீழ்ந்தேன் தெரியுமோ?"

"பலமிழந்தாய்! 'பயில்வான்' என்ற பட்டம் வெறும் பகட்டு என்பது வெளியாயிற்று!"

"வெற்றிபெற்ற திமிர்!—இப்படிப் பேசுகிருய்!"

"ஆம்! வெற்றிபெற்றேன்-உன்னை நான் தோற்கடித்தேன்"

"தோற்கடித்தாயா அல்லது நான் தோற்றேனு?"

"எப்படி வேண்டுமானுலும் சொல்லிக்கொள். எனக்கென்ன? நான், ஜெயித்தேன்!"

"நீ ஜெயித்தாய் என்றால் எப்படி?"

"உன்னைத் தோற்கடித்ததால்...!"

"அதாகப்பட்டது..........நான் தோற்றதால்!"

"ஆமாம்!"

"நான் தோற்காவிட்டால் நீ ஜெயிக்கமுடியுமோ. இது தெரியாமல் குதிக்கிருயே — நான் தோற்றதற்காகப் பாராட்டு. மாலை சூட்டு. மடியில் ஏதாவது இருந்தால்தா. நான்தானே உன்வெற்றிக்குக் காரணம்"

*

ஊர் புகழும் 'பயில்வான்,' உதை பட்டபின்னர், ஜெயித்தவனைப் பார்த்து, இவ்விதம்பேசினல்,நகைச் சுவைக்குரியதோர் அம்சமாக விளங்கும் — பைத்யக்கார ஆஸ்பத்திரிக்கு 'ஒரு ஆள்' அதிகமாகும். ஆனல், அன்பர் ஆச்சாரியார் அவர்கள் 'தோற்ற பயில்வான்' ஸ்தானத்திலிருந்து இவ்விதம் பேசியிருக்கிருர் என்று அறியும்போது விசித்திரமாக இருந்தது. 18-ந் தேதிய சட்டசபையில் 'போலீஸ் மான்யம்' கோரி இவ்விதம் பேசினுராம். அவர் இவ்விதம் பேசியதும் கரகோஷம் எழுப்பினராம் காங்கிரஸ் M L.A.க்கள்! "இதிலென்னப்பா ஆச்சரியம்? இன்று அவர்களுடைய வேலை அது தானே. கரங்கள்தானே கைகாட்டி. கரங்களிருக்கும் பயனை இப்போது தானே அனுபவிக்கின்றனர். கை தட்டு! கைதூக்கு! — இதுதானே, அவர்களது, இன்றைய வேலை" என்று கூறலாம் நீங்கள். அது அறிவேன், நான்! ஆனல் சிரிக்காதவனும் வயிறு குலுங்கச் சிரிப்பானே, தோற்ற பயில்வானின் துந்துபி கேட்டால்! ஆனல் அத்தகைய 'காமிக் — காட்சி'கூட, அவர்களை 'கரகோஷம்'தான் செய்யச் செய்ததாம்!! பாபம்—அவ்வளவு அசந்து கிடக்கிருர்கள். 'மரக்கட்டைகளல்ல'—ஆனல், என் செய்வது? சிரிக்கலாமா! செச்சே!!

ஆச்சாரியார், வாதத்திறமை மிக்கவர் அதன் மூலம் தரு நேரம், குவிததவர் என்றெல்லாம் ...ற்றிருக்கிறேம். ஆனல் அவர்தான், நாம் கலைப்பில் (2) தந்திருப்பது போலப் பேசியிருக்கிருர். கம்யூனிஸ்ட் தோழர் கலியாணசுந்தரம போலீஸ் இலாக்காவுக்கென முன்னைவிட இப்போது கோடிக் கணக்கில் செலவழிப்பதேன் என்று (1) கேட்டிருக்கிருர்—

"ஏன், இவ்வளவு அதிகச் செலவு?"

"கம்யூனிஸ்டுகள் தொல்லை!"

"மலபார் விசேஷ போலீஸ் கூட்டம் ஏன்?"

"கம்யூனிஸ்டுகளுக்காக"

இவ்விதம், எதற்கெடுத்தாலும், அவர்களையே சுட்டிக்காட்டினாலலவா, சுதந்திர ஜோதிகள்—அதைச் சுட்டிக் காட்டி தோழர் கலியாணம் இடித்துரைத்திருக்கிருர் —'பாரீர் 65ஐ' என்று காட்டியிருக்கிருர். அதற்கு, ஆச்சாரியார் 'பயில்வான் பாஷை' பேசியிருக்கிருர்!!

இரண்டுகோடி — செலவழித்ததால்தான் இத்தனை கம்யூனிஸ்டுகள் வரமுடிந்ததாம்! "எடுமாலை—போடு எமக்கு" என்று கூருமல் கூறுகிருர், எதிரி நம்பர். 1. என்று பேசியவர்.

"இந்த இரண்டு கோடி போனுலும் போகட்டும் — கம்யூனிஸ்டுகளுக்குப் பார்லிமெண்டரி முறையில் வாய்ப்புக் கிடைத்ததல்லவா? இந்தப்பெரிய காரியத்தை செய்தது யார்! நாங்கள்தானே! எடு மாலையை போடு போடு!:' என்கிருர்.

கம்யூனிஸ்டுகளுக்கு பார்லிமெண்டரி முறை பிடிக்குமா — அல்லது பாட்டாளிகளின் நம்பிக்கை பெற்ற சர்வாதிகாரி ஆட்சி முறைதான் அவர்கள் நோக்கமா — என்பதில், அல்ல, கவனம் செலுத்தப்படி, வாசகர்களை நாம் கோருவது.

அவர்களுக்கு 'பார்லிமெண்டரி முறை'யில் பாசம் ஏற்பட இரண்டு கோடி அழித்தோம் என்கிருரே! அந்த இரண்டு கோடியும் யாருடைய சொத்து? பார்லிமெண்டரி முறையில் கம்யூனிஸ்டுகளுக்கு பாசம் உண்டாகச் செய்வதற்காக அமெரிக்கர் தந்ததா, டாடா கொடுத்ததா, பிர்லாவின் அன்பளிப்பா, முத்தையா செட்டியாரின் காணிக்கையா, ஆதீனத்தரசர்கள் அளித்ததா! அல்ல — அல்ல. அல்லவே, அல்ல! மக்கள் கொடுத்த தொகை, அது. நமது வரிப் பணம்! அதை எடுத்து, 'பார்லிமெண்டரி முறையில் பாசம் உண்டாகச் செய்வதற்காக' இவர் செலவழிப்பது என்றால், எவர்தான் ஒப்ப முடியும்! வீடு தீப்பற்றி எரிகையில், 'ரோஜாச் செடிக்கு தண்ணீர் ஊற்றுகிறேன், என்று எவர்தான் கூறுவர்!! நாடு—துடிக்கையில், இந்த பரீட்சைக்கா' பணத்தைச் செலவிடுவது?—என்று எவரும் எண்ணர்—எண்ணினுலும் கேளார் — கேட்டாலும் குரலை அடக்கிடுவோம் எனும் எண்ணமா! எகத்தாளமா!!

"பார்லிமெண்டரி முறையில் பாசம் உண்டாயிற்றே — அது போதும். இரண்டு கோடி போனுலும் பரவாயில்லை" என்கிருரே — 2 கோடியை வீணுக்கி பார்லிமெண்டரி முறைக்கு "பலாத்காரவாதி"களைக் கொண்டுவரும் அளவுக்கு, அன்பர் ஆச்சாரியாருக்கு பார்லிமெண்டரி முறை மீது அவ்வளவு காதலா! பற்று! ஆசையா!!

'பார்லிமெண்டரிமுறை' குறித்து பரமானந்தத்தோடு பேசும், இந்தப் பயில்வான்தான் கூறினர், இதே சென்னை சட்ட சபையில்; பஜனை மடமாக்குகிருர்! என்ற குற்றச் சாட்டை எதிர்க் கட்சித் தோழர்கள் வீசியபோது. நன்ருகக் கவனத்திலிருக்கிறதே!

"சட்டசபை பஜனை மடமாகிவிட்டது என்று எதிர்க்கட்சியினர் குறை கூறினர்கள். பஜனை மடமாகிவிட்டதென்றால் நான் சந்தோஷமே அடைவேன். அப்படி ஆகவேண்டும் என்பதுதான் என் ஆசை" என்று பேசினரே, இவர். பஜனை மடதாரிக்கு எப்படி வந்தது இந்தப்பாசம்! 'பார்லிமெண்டரி முறை'யைப்பெற —அது மணம் தரும் ரோஜா என்பதை மக்களிடம் விளக்க, எத்தனையோ கிளர்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன—உலகில். மறுத்த மன்னன் பிணமாகியிருக்கிருன்! கேட்ட மக்களின் இரத்தம் ஆருக ஓடியிருக்கிறது!

"மன்னனே," சர்க்கார்.

"பிரபுக்களே," சர்க்கார்.

"சிலரே"—சர்க்கார்

இவ்விதம் இருந்த முறைகளைத் தூள் தூளாக்கி, "மக்கள் சர்க்கார்" என்கிற நிலையை எய்த, நடைபெற்ற போராட்டங்கள் ஏராளம்.

அரசனே கடவுள் — அவன் வைத்ததே சட்டம் என்று கூறப்பட்ட Monarchy ஒழிந்து; "இவர்கள் சொல்வதே சட்டம். இவர்களுக்கு எல்லாம் தெரியும். இவர்களே சர்க்கார்" என்று கூறப்பட்ட Oligarchy முறை பொசுக்கப்பட்டு; "பிரபுக்களே தலைவர்கள். அடிமைகளை ஆளும் அம்சம் பெற்றவர்கள்" என்று இருந்த கொடூரமான Plutarchy என்கிற பெயர் தகர்க்கப்பட்டு, ஜனநாயகக் குரல் (Democracy) எழுப்ப, எத்தனையோ காலம் பிடித்திருக்கிறது! இரத்தத்துளிகள் சிந்தப்பட்டிருக்கின்றன! இந்த முறைகள் யாவும் "பஜனைமடத்துக்குப்பின்" ஏற்பட்டவைகளேயொழிய, 'பஜனை மடமே பாராளுமன்றம் என்பதை மக்கள் நம்பிக்கிடந்ததால் அல்ல. ஆனல் இந்தப் பாரதப் பிரசங்கியோ, வளர்ந்த 'மக்கள் குரலை' கேலி செய்வதுபோல, பார்லிமெண்டு பஜனைமடமாகவேண்டும் என்ருர்! விமானம் வேண்டாம்—கட்டைவண்டி தேவை என்ருர். அவ்விதம் பேசிய, அவர் இன்று, வக்காலத்து வாங்குகிருர் பார்லிமெண்டு முறைக்கு. "பணத்தை ஏன் வாரியிறைத்தாய்?" என்று தட்டிக் கேட்பதைக் கண்டதும் தாஜா செய்கிருர்! சாகசச் சிரிப்பு வீசுகிருர்! புலி பசுவாகும் விந்தை—கண்முன் நடத்திக் காட்டுகிருர் 'கல்கி' தாங்கி!

பார்லிமெண்டரி முறையைப் பரிகாசம்செய்தவர், மக்கள் பணத்தை 'போலீஸ் இலாகா'வுக்கென வாரியிறைத்ததேன், என்றதும், 'வக்கீல்' ஆகிருர்—வாதத்திறமை மங்கிடவில்லை இன்னும் எனக்கு என்று நிரூபிக்கப் பார்க்கிருர்.

"இரண்டு கோடி"—

"இது, கம்யூனிஸ்டுகளுக்கு பார்லிமெண்டு முறைமீது பாசம் ஏற்படுத்துவதற்காக!"

சரி—ஒப்புவோம், வாதத்துக்கு. ஆனல் இந்த 'இரண்டு கோடி'யோடு போய்விடவில்லையே. இதனல் ஏற்பட்ட இரத்தக்களரிகளுக்கு என்னபதில் சொல்லுவார்? மிருகவேட்டை நடத்தப்பட்டதே! 'குன்றத்தூர்' கொடுமை நடைபெற்றதே! கும்பகோணம் கொதித்ததே! வயலிலே வீழ்ந்தனவே பிணங்கள்! மரக்கிளைகளிலே தொங்கினவே கற்பழிக்கப்பட்டதால் கதிகலங்கிப்போன பெண்களின் சடலங்கள்! — இவைகள், எதற்காக? இவைகளும் கம்யூனிஸ்டுகளுக்குப்

தேனிக் கலவர வழக்கு நிதி நாடகம்

ரூ. 1063-9-9 நன்கொடை

தேனிக் கலவரவழக்கு நிதிக்காக, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கம்பத்தில், 11—7—52 வெள்ளியன்று இரவு, ஒரே பொழுதில், "கல்சுமந்தகசடர்", "விஷக்கோப்பை" ஆகிய இரு நாடகங்களும் அழகுற நடந்தேறின.

சுயமரியாதை இயக்கத்தின் நீண்டநாள் தலைவர்களில் ஒருவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் தீவிர பங்கு கொண்டு பணியாற்றி வருபவருமான பட்டிவீரன்பட்டி தோழர் W. P. A. சௌந்தரபாண்டியனுர் நாடகங்களுக்குத் தலைமை தாங்கினர்கள். நாடகங்கள் தேனிக் கலவர வழக்கு நிதிக்கென்று குறிப்பிடப் பட்டிருந்தமையாலும், நாடகங்களில் கழகத் தோழர்களான இரா. நெடுஞ்செழியன், ஹனிபா, எம். அய்யாசாமி, எஸ்.வி. தொந்தி, தா. ஆவுடையப்பன் ஆகியோர் முக்கியமாக நடிப்பதாக இருந்தாலும், நாடகங்களைக் காணவேண்டுமென்ற ஆவல், கம்பத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மிகவாக இருந்து வந்தது. எதிர்பாராத நிலையில் அன்று கடுமழை காலையிலிருந்து மாலைவரையில் இடைவிடாது பெய்த காரணத்தால், நாடகவசூலை ஓரளவுக்கு அது பாதித்துவிட்டது எனலாம். என்றாலும் மக்கள் காட்டிய ஆர்வத்தின் காரணமாக மொத்தம் 2063-0-0 வசூலாயிற்று. மொத்த செலவு ரூ. 999—6—3. செலவுபோக பாக்கி ரூ. 1063-9-9 வழக்கு நிதிக்கு நன்கொடையாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

நாடகங்களில் நடித்த பெரும்பாலானேரும் கழகத் தோழர்களாதலால், மிக்க ஆர்வத்தோடு, திறம்பட நடித்துக்காட்டினர்கள். நாடகங்களின் இறுதியில் தோழர் அ. பொன்னம்பலனுர் அவர்கள் நாடகங்களின் நோக்கத்தை விளக்கிவிட்டு தோழர் W. P. A. சௌந்தரபாண்டியனுர் அவர்களைத் தலைமையுரை ஆற்றும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். தோழர் பாண்டியனுர் அவர்கள் தேனிக் கலவர வழக்கை வெற்றிகரமாக நடத்தி முடிக்கவேண்டியதன் அவசியத்தையும், அதற்குப் பொது மக்கள், குறிப்பாக மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பெருவாரியாக நிதி தந்து உதவ வேண்டியதன் அவசியத்தையும் விளக்கிப் பேசினர்கள்.

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தேனிக்கலவர வழக்கின் விபரத்தையும், வழக்கு நடத்துவதன் மூலம் கிடைக்கும் வெற்றியோ, தோல்வியோ கழகத்தை வளர்க்கவும், நாட்டிற்கு நல்ல பாடங் கற்பிக்கவும் எவ்வகையில் பயன்படுவதாகும் என்பதையும் கூறி, நடிகர்களுக்கும், நாடகங்கள் வெற்றி பெறுவதற்குத் துணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

நாடகங்கள் வெற்றிகரமாக நடைபெற தோழர்கள் W. P. A. சௌந்தரபாண்டியனுர், அ. பொன்னம்பலனுர், எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, தேவராசன், கிளைக் கழகத் தோழர்கள் அனைவரும் எடுத்துக் கொண்ட முயற்சி குறிப்பிடத் தக்கதோடு, பாராட்டத் தக்கதுமாகும்.

முரசு ஒலித்தது! முதற்படை புறப்படுகிறது!

திராவிட முன்னேற்றக் கழகம், இந்தி ஏகாதிபத்ய எதிர்ப்புக்கான அறப்போர்த்திட்டத்தை நடத்தத் தீர்மானித்து விட்டது.

இந்தி ஆதிக்கத்தை அழித்தாக வேண்டும் — வடவரின் ஆதிக்க வெறியை ஒழித்தாக வேண்டும்— என்று துடிதுடித்துக் கொண்டிருக்கும் தோழர்களே! நேரடி நடவடிக்கையைத் தேடிக்கொண்டிருந்தீர்களே! தாயகவிடுதலைப் போருக்குத் தயாராக உள்ள திராவிடத் தோழர்களே! இதோ கிடைத்து விட்டது வாய்ப்பு! அழைப்பு வந்து விட்டது! ஆண்மையாளர்களே! அணிவகுப்பிலே வந்து சேருங்கள்!

தாய்மொழியை அழிக்கத் துணிந்த பாதகர்கள், வேற்று மொழியாம் இந்தியைப்புகுத்தி ஆதிக்கம்செலுத்தும் அக்ரமத்தை அனுமதிப்பது அறிவுடைமையுமல்ல, ஆண்மையாளர் செயலுமாகாது, அறநெறியும் அல்ல!

இந்திமொழி ஆதிக்கக்காரர்களின் ஆணவம், எந்தக்கட்சியிலே இருந்தாலும், துளியாவது, தன்மான உணர்ச்சி, தன் நாட்டுப் பற்றுப உள்ள எவருக்கும், சகிக்க முடியாத அவமானத்தை உண்டாக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டது.

இந்தி படித்தவருக்கே உத்யோகம் என்று செந்தமிழ் நாட்டிலே துணிவுடன் பேசப்படுகிறது! இந்தி படித்தால்தான் ஆட்சி மன்றங்களிலே அமர இயலும் என்று ஆர்ப்பரிக்கிறார்கள். இந்தியில் பேசு! இல்லையேல் வெளியே போ! என்று ஆணவமாக, நாடாள்வோரே பேசுகின்றனர்—ஏசுகின்றனர்.

தமிழிலே கேள்வி கேட்டால் டில்லி ஆட்சிமன்றத்தில், கேலிபேசி, வெளியே விரட்டுகிறார்கள். டில்லி மந்திரி லால்பகதூர் சாஸ்திரியின் இந்தி மொழி வெறியை, முற்போக்குக் கருத்து கொண்ட சகலரும் கண்டித்தனர் — எனினும் அந்த ஆணவப்போக்குவளருகிறது, வளருகிறது, நம்மை மானபங்கப்படுத்தும் அளவுக்கு வளருகிறது.

'நாலு எழுத்து கற்றுக் கொண்டால் போதும், பேசத்தெரிந்தால் போதும்,' என்றெல்லாம் பேசி வந்தவர்கள் இன்று இந்தி படிக்காதவர்க்கு எங்கும், எதிலும் இடம் கிடையாது என்று இறுமாப்புடன் கூறுகிறார்கள்!

ஏன்? எங்கிருந்து பிறந்தது இந்த துணிவு? எதை நம்பி இந்த வெறியாட்டமாடுகிறார்கள்? என்று எண்ணிப் பாருங்கள்.

திராவிடச் சமுதாயம், இனவுணர்வற்று, மொழிப்பற்று அற்று, பாழ்பட்டு, பேதப்பட்டுக் கிடக்கிறது—எனவே திராவிடர்கள் ஏனென்று கேட்க மாட்டார்கள், எதிர்க்கும் சக்தியை இழந்து விட்டார்கள், என்று வடநாட்டார் நம்புகிறார்கள். நமது ஆதிக்கத்தைச் சகல வழியாலும் எல்லாத் துறைகளிலும் புகுத்துவதற்கு இதுதான் தக்க சமயம் என்று எண்ணியே, இவ்வளவு மொழி வெறியும் ஆதிக்க ஆணவமும் கொண்டுவிட்டனர்.

இந்தியை அரசியல் மொழியாக்குவதன் மூலம், திராவிடர்களை நிபந்தனையற்ற அடிமைகளாக்கி, திராவிடர்களின் உழைப்பை உறிஞ்சிக் கொழுத்து வாழவும் கோல் கொண்டு தாக்கவும், வடநாட்டு ஏகாதிபத்யம் திட்டமிட்டு, வேலை செய்கிறது.

திராவிட நாட்டிலே, திராவிட மொழிக்கு ஆதிக்கம் இல்லை! திராவிடநாடு, டில்லி ஏகாதிபத்யத்துக்கு அடிமையாக்கப்பட்டிருக்கிறது. திராவிடநாடு மந்திரிகள், டில்லி ஏகாதிபத்யத்தின் கங்காணிகள், கமிஷன் ஏஜண்டுகளாகி, திராவிட மக்களைக் காட்டிக் கொடுத்து திராவிட நாட்டை வடவர் சுறண்ட வழிசெய்து கொடுத்து வரும் தரகர்களாக உள்ளனர்.

இந்த இழிநிலை, திராவிடத்தை வெகு விரைவிலே தேயவைத்து, விடும்.

இப்போதே திராவிடர்கள், கண்காணாச் சீமைகளிலே, கூலிகளாகி அவதிப்படுகிறார்கள்— இப்போதே, திராவிடரின் நைநெசவுத் தொழிலை நாசம்செய்து, வடநாட்டு ஆலை முதலாளிகளுக்கு திராவிடம் மார்க்கட் ஆகக்கப்பட்டு விட்டிருக்கிறது. இப்போதே திராவிட வியாபாரிகளின் வாழ்வு மார்வாடியின் பேனா முனையிலே சிக்கிக்கொண்டிருக்கிறது.

இப்போதே திராவிடத்திலே, தொழிற்சாலைகள், வியாபாரக் கோட்டங்கள், பாங்குகள், பங்கு வியாபாரக் கம்பெனிகள், தங்கம வெள்ளிக்கடைகள், தானிய மண்டிகள் தரகு மண்டிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் இரும்பாலைச் சாமான்கள் விற்பனை செய்யப்படும் கம்பெனிகள், பத்திரிகை நிலையங்கள், பண்டகச்சாலைகள், உண்டிக் கடைகள், என்று எதிலே பார்த்தாலும், வடநாட்டாரின் ஆதிக்கம் இருக்கிறது—வளர்கிறது.

இப்போதே, சென்னையில் சௌகார்பேட்டையும், திருச்சியில் டால்மியாபுரமும் இருக்கிறது.

இப்போதே மொருளாதாரத் துறையிலே ஆதிக்கம்கொண்ட வடநாட்டார், பிரிட்டிஷ் அமெரிக்க முதலாளிமார்களுக்குச் சமானமாக கொழுத்து இருப்பதுடன், அந்த வெளிநாட்டு முதலாளிகளின் கூட்டுறவுடன், திராவிடத்தை மேலும் கொள்ளையடிக்கும் கொடுமையான திட்டத்தைத் தீட்டி நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

பாலைவனம் சோலைவனமாகிவிட்டது வடநாட்டில்!

சோலைவனம் சுடுகாடு ஆகிவருகிறது இங்கே—திராவிடத்தில்.

இந்த இழிநிலையைத் தாங்கிக் கொண்டு எத்தனை நாளைக்குத்தான் இருக்க முடியும்? சுறண்டல் ஒரு பக்கம் ஆதிக்கம் மற்றோர் பக்கம்— இதற்கிடையில் கிடந்து சீரழிவதா, நமது திருவிடம்! மொழிவெறி, வடநாட்டினரை பிடித்து ஆட்டிவைக்கிறது. எப்படியாவது, தமது மொழிக்கு 'அரியாசனம்' தேடித் தருவதில் முனைந்து நிற்கின்றனர். வடநாட்டினர். தேசிய பாஷை யென்றனர்—ராஜ்ய பாஷை என்கின்றனர்—'இந்தி படிக்காவிட்டால் இடமில்லை, வாழ்!' என்று, மிரட்டுகின்றனர். தாய்மொழியைக் காக்க, நாம் இதுவரை நடத்திய போராட்டங்களைக் கண்டும், இந்தி ஏகாதிபத்யம், அரசுரிமையைக் காட்டிக் கொக்கரிக்கிறது! 'எங்கும் இந்திமயம்' — உண்டாக்க, திட்டமிட்டு. வேலை செய்கிறது. எதிலும் இந்திக்கே இடம்! தபால் இலாக்காவில், கார்டுகளில் இந்தி—இதுவரை நாம் கண்டதில்லை; இப்போது காண்கிறோம், திகைக்கிறோம். நாணயங்களிலும், இந்தி! அதுமட்டுமல்ல, ரயில்வே நிலையங்களிலும், இந்தி. அதுவும் முதலிடம் அதற்கு. தமிழ் மொழியைத் தாழ்த்துகிறது டில்லி ஆதிபத்யம்! திட்டமிட்டுச்செய்கின்றனர் இந்தி வாலாக்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

பார்லிமெண்டரி முறையில் பாசம் ஏற்படச் செய்வதற்குத்தானா? அறுந்த தாலிகள்! குவிந்த பிணங்கள்! நடந்த தடியடி! துப்பாக்கி முழக்கம்!—இத்தனையும் கம்யூனிஸ்டுகளுக்கு ஜனநாயகத்தின்மீது ஆசை வருவதற்காக மேற்கொண்ட "நல்லெண்ண நடவடிக்கைகள்" என்று கூறுவாரா இந்த அகிம்சாவாதி?

> "விஷயத்தைத் திருப்புகிறாய் — இத்தனை நடவடிக்கைகளும் கம்யூனிஸ்டுகளின் அட்டகாசத்தை ஒழிக்கவன்றோ, மேற்கொள்ளப்பட்டது"

என்றுவது மறுத்துரைப்பாரா! அவர்கள் 'அட்டகாசத்தை' அடக்க எனித்தனை குருதி ஓடவேண்டும்? வீதிகளிலே மனிதர்கள் பிணமாக வேண்டும்? விழியும் காலும் இழக்க வேண்டும்? "திறமையான போலீஸ் நிர்வாகம்"—என்று வேறு செப்பியிருக்கிறார். 'திறமையானது' — எதைவைத்து, இவர், விளக்கம் தருகிறார். சுட்டுக்கொன்றதிலா! அல்லது 'கலவரக்காரர்களை' அடக்கிப் பிடித்ததிலா!! (தொடரும்)

சி. என். ஏ.

26—7—52 சென்னை ஆலோசனைக் கூட்டம் முடிந்தது இரவு சேலம் சுற்றுப் பிரயாணத்துக்குப் புறப்பட்டார்.

27—7—52 குள்ளப்பட்டி கட்டிட திறப்புவிழா மாலை 6-மணிக்கு சேலம் பொதுக்கூட்டம்.

28—7—52 திங்கள் காலை ஜலகண்டபுரம். மாலை எடப்பாடி.

29—7—52 செவ் காலை வேலூர் மாலை நாமக்கல்.

30—7—52 புதன் மாலை ராசிபுரம்.

அங்கிருந்து நேராக ஈரோடு செல்வார். ஆகஸ்டு முதல் தேதி போரில் பங்கேற்பார்.

அறப்போர் முறை

அறப்போரில் கலந்து கொள்ளும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், ரயில்வே நிலயத்தில் இந்தி எழுத்தை அழிக்கத் தீர்மானித்ததும்,

(1) உள்ளூர் தி. மு. க. கிளையில் தமது பெயரைப் பதிவு செய்து விடவேண்டும். தலைமை நிலயத்துக்கும் உடனே கடிதம் அனுப்பி விடவேண்டும்.

(2) அறப்போருக்குக் கிளம்பும்போது திராவிட முன்னேற்றக் கழகக் கொடியின் அடையாளத்தை (பாட்ஜ்) சட்டையில் பொறித்துக் கொள்ளவேண்டும்.

(3) ஜூலை 31-ந்தேதி மாலையே, துண்டு வெளியீடு, சுவரொட்டிகள் மூலம், அறப்போர் தகவலைப் பொது மக்களுக்கு அறிவித்து விட வேண்டும்.

4) ரயில்வே ஸ்டேஷன் அதிகாரிகளுக்கும் உள்ளூர் போலீஸ் அதிகாரிகளுக்கும் கடிதம் அனுப்பிவிடவேண்டும்.

(5) கழகக் கட்டிடத்திலிருந்தோ, வீட்டிலிருந்தோ, தார் டப்பாவும் தூரிகை (பிரஷ்)யும் ஏந்திய வண்ணம், 'இந்தி ஒழிக' 'தமிழ் வாழ்க! திராவிடநாடு திராவிடருக்கே!' என்ற முழக்கத்துடன் ரயில்வே நிலயம் செல்லவேண்டும்.

(6) அறப்போர் வீரர்கள், ஒரு தடவைக்கு நால்வருக்குமேல் இருக்கக் கூடாது.

(7) போர்டில் உள்ள இந்தி எழுத்தைத் தார் பூசி அழிக்கும் போது, அமைதி கெடாத வகையிலும், கண்ணியக்குறைவு ஏற்படாத முறையிலும், அறப்போர் வீரர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

(8) போலீசார் கைது செய்தாலோ, அடித்தாலோ, பொறுமையுடனும் பூரிப்புடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு துளியும் கலவரத்துக்கு இடம் ஏற்படவிடக் கூடாது.

(9) ஒரு குறிப்பிட்ட இடத்தில, வேறு கழகத்தவர், இந்தி எழுத்து அழிப்பிலே ஈடுபட்டிருந்தால், அவர்களுக்கு இடையூறாக, அதே நோக்கத்தில், அதே இடத்தில், அறப்போர் புரியச் செல்லாமல், வேறு இடம், நேரம், தேடி, இந்தி எழுத்து அழிப்புப்போரை நடத்த வேண்டும்.

(10) வேறு கழகத் தோழர்கள், இந்தி எழுத்து அழிப்புக் காரியத்தில் ஈடுபட்டுச் சிறைப்பட்டு விட்டால், போர்டிலே உள்ள இந்தி எழுத்தை அழிக்கும் காரியத்தை, தி. மு. கழகம் நடத்தவேண்டும்.

(11) வேறு கழகத் தோழர், இந்தி எழுத்து அழிப்பதை வெற்றிகரமாக நடத்திவிட்டால், அந்த ஊரில் தபாலாபீசில் போர்டில், இந்தி எழுத்து இருந்தால் (சில ஊர்களில் உண்டு) அதை அழிக்க வேண்டும்.

(12) அறப்போர் வீரர்கள், கைது செய்யப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டால், அபராதம் செலுத்த முடியாது என்று கூறி, சிறை செல்ல வேண்டும்.

(13) எல்லா வகையாலும், அறப்போர் கண்ணியமான முறையிலே இருக்கும்படி, அந்தந்த ஊர் தி. மு. கழக முக்யஸ்தர்கள், கவனித்துக் கொள்ள வேண்டும்.

அன்பன்,

அண்ணாதுரை.

'வாய்' பிளக்கும் சிறைச்சாலையே, வருகிறார்கள் வீரர்கள்!

5-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தக் கொடுமையை எப்படி நாம் சகிக்கமுடியும்? தாய் மொழிக்கு இடமில்லை—வடநாட்டு இந்திக்கு வாழ்வா? அதுவும் செந்தமிழ் நாட்டிலா! நம்மை என்றென்றும், மீளா அடிமைக் குழியில் தள்ள, திட்டமிட்டு செய்யப்படும் சதியன்றோ, இது! வாழ்வைச் சுரண்டும் வடநாட்டாதிக்கம், நம் மானத்தையும் சூறையாடுகிறதே! இந்தக் கேவலம் ஒழியவேண்டாமா? தலையிலே இந்தி! காலிலே, தமிழா!! இந்திக்கு முதலிடமா? அதுவும் நமது இன்பத் திராவிடத்திலா? நம்நாட்டைச் சுரண்டும் கூட்டம், செய்கிறதே, இதை! இந்த ஆணவத்துக்குச் சமாதி கோல, டில்லி ஆதிபத்யத்துக்கு எச்சரிக்கை தர, மொழி வெறியர்களுக்குப் பாடம் கற்பிக்க

முரசு ஒலித்துவிட்டது!

முதற்படை புறப்படுகிறது

ஈரோடு
பொதுச்செயலாளர்
அண்ணாதுரை
எஸ். ஆர். சந்தானம், சி. வி. ராசகோபால்
*
மதுரை
இரா. நெடுஞ்செழியன் M. A.
எஸ். முத்து, எம். அய்யாசாமி
*
திருச்சி
மு. கருணாநிதி
இசை முரசு ஹனீபா, எம். எஸ். மணி
*
கோவை
ஈ. வி. கே. சம்பத்,
நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி
*
தஞ்சை
என். எஸ். இளங்கோ
*
காஞ்சி
சி. வி. எம். அண்ணாமலை
*
திண்டிவனம்
ஆ. தங்கவேலு
*
காட்பாடி
அலமேலு அப்பாதுரை
வேலூர் இளஞ்செழியன்
*
மேட்டுப்பாளையம் (கோவை)
சண்முகநாதன் B. A.
*
சோழவந்தான்
தா. ஆவுடையப்பன், நடிகமணி டி. வி. நாராயணசாமி
*
லால்குடி
அம்பில் தர்மலிங்கம்
*
வேலூர் டவுன்
மோகனவேல், பாண்டியன், கருத்தோவியன்
*
பேசின் பிரிட்ஜ்
வி. முனுசாமி எம். சி., கலையழகன், வேதாசலம்
*
வண்ணை
கே. எம். கண்ணபிரான், இளஞ்சேரலாதன்.
*
திருவொற்றியூர்
கங்காதரன், எஸ். பி. டி. திராவிடமணி,

சென்னை—எழும்பூர்
என். வி. நடராசன், இராமமிர்தம்மையார்,
சத்தியவாணி முத்து, சி. வி. ராஜன்
*
கடலூர்
கே. ஏ. மதியழகன் B. A.
*
சேலம்
ஜி. பி. சோமசுந்தரம்
*
அரக்கோணம்
கிருஷ்ணசாமி
*
போளூர்
போளூர் சுப்ரமண்யம்
*
திருவண்ணாமலை
ப. உ. சண்முகம் (நகரசபைத் தலைவர்)
*
பொள்ளாச்சி
கோபி. ராசு.
*
வாலாஜாரோட்
எஸ். எஸ். பி. லிங்கம், பொன்னம்பலம்
*
மோதூர்
சென்னியப்பன்
*
சென்னை பீச்சு
டி. எம். பார்த்தசாரதி,
காஞ்சி மணிமொழியார், ஆர். பாலு
*
பெரம்பூர்
ஏ. கே. சாமி, பி. சுந்தரமூர்த்தி,
ஆசை விசயன்
*
சைதாப்பேட்டை
பெ. குருசாமி, கோ. இளவரசு
*
சேத்துப்பட்டு
ஆர். டி. அரசு, வண்ணை—நடராசன்,
அ. ச. வேலன்
*
குடந்தை
எஸ். கே. சாமி, பராங்குசம்
குண்டூர் சென்றிருக்கும் கே. கே. நீலமேகம்
முதல் தேதி திரும்பி வந்து கலந்து கொள்வார்.

தி.மு.க. தோழர்களே!

★

கோவில்பட்டித் தீர்மானத்தை ஒட்டியும், நாட்டில் தற்போது உள்ள சூழ்நிலையைக் கருதியும், இந்தி ஏகாதிபத்ய ஒழிப்புக்காக அறப்போர் துவக்கியாகவேண்டும் என்று, தி. மு. கழக, அவசர ஆலோசனைக் கூட்டம் தீர்மானித்திருக்கிறது.

அந்த அறப்போரின் அறிகுறியாக, ரயில்வே ஸ்டேஷன்களில் உள்ள இந்தி எழுத்தைத் தார்கொண்டு அழிப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்தக் காரியத்தில், திராவிடர்கள் அனைவரும், கட்சிபேதமற்று ஈடுபடுகிறார்கள் என்பதை வடநாட்டு ஏகாதிபத்யம் உணருவதற்காகவும், கிளர்ச்சிக்கு முழு வலிவு ஏற்படுவதற்காகவும், ஆகஸ்ட் முதல் தேதி அன்றே, இதே காரியத்தில் திராவிடர் கழகம் ஈடுபடுவதால், திராவிடர்கள் அனைவரும் கட்சி பேதமற்று இந்தக் காரியத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதை வடநாட்டு ஏகாதிபத்தியம் உணரச் செய்யவேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டுவிட்டதால், தி. மு. கழகத் தோழர்களும் ஆகஸ்ட் முதல் தேதியே அறப்போரில் ஈடுபடுவது என்று தீர்மானித்திருக்கிறது.

அமைதி குலையாத முறையில், தி. மு. கழகத் தோழர்கள், இந்த அறப்போரில் ஆகஸ்ட் 1-ந்தேதி கலந்துகொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்திற்கு இணங்க, முதல் படைவரிசையில், தோழர்கள் நெடுஞ்செழியன், கருணாநிதி, சம்பத், என். வி. நடராஜன், மதியழகன், நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, டி. வி. நாராயணசாமி, இராமாமிர்தத்தம்மையார், சத்யவாணிமுத்து, அலமேலுஅப்பாதுரை, திருவண்ணாமலை நகரசபைத் தலைவர் ப. உ. சண்முகம், சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தங்கப்பழம், என். எஸ். இளங்கோ, ஏ. கே. வேலன், எஸ். கே. சாமி கே.கே. நீலமேகம், போளூர் சுப்ரமண்யம், எஸ். ஏ. ராஜமாணிக்கம், எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, ஆவுடையப்பன், டி. எம். பார்த்தசாரதி, வி. முனுசாமி, கே. எம். கண்ணபிரான், நாகூர் அனீபா, எம். எஸ். மணி, சி. வி. ராஜன், ஜி. பி. சோமசுந்தரம், கோ. பி. ராஜு, அம்பில் தர்மலிங்கம், மணிமொழியார் ஆகிய முன்னணி வீரர்களும், மற்றும் ஏராளமானோரும் பற்பல இடங்களில் இந்திப் போர்டை அழிக்கப் போகிறார்கள். நான், ஈரோடு சென்று அறப்போரில் கலந்துகொள்ளத் தீர்மானித்து விட்டேன். உங்கள் ஊர் தி. மு. கழகத்தில் பதிவு செய்து கொண்டு நீங்களும் அறப்போரில் ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,
அண்ணாதுரை.

Edited Printed & Published by C. N Annaduri M. A, at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St, Kancheepuram